செ.வெ.எண்:28 நாள்: 16.06.2021

**பெரம்பலூர் மாவட்டம்**

**பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.17 இலட்சம் மதிப்பிலான நவீன ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் ரூ.2,40,000 மதிப்பிலான 3 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்களிடம் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.ஆர்.பாரிவேந்தர் அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பிரபாகரன் முன்னிலையில் பொதுமக்களின் அவசர மருத்துவ சேவைக்காக வழங்கினார்.**

பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.17 இலட்சம் மதிப்பிலான நவீன ஆம்புலன்ஸ் வாகனம் மற்றும் ரூ.2,40,000 மதிப்பிலான 3 ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்களிடம் பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.ஆர்.பாரிவேந்தர் அவர்கள் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பிரபாகரன் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொதுமக்களின் அவசர மருத்துவ சேவைக்காக இன்று (16.06.2021) வழங்கினார்.

**இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளதாவது:**

பெரம்பலூர் மாவட்டத்திற்கு பொதுமக்களின் மருத்துவ சேவை மற்றும் அவசர தேவையினை கருத்தில் கொண்டு 108 ஆம்புலன்ஸ் 13 வாகனங்கள் இயங்கி வருகிறது. பெரம்பலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு 1 சரக்கு வாகனமும், 1 மருந்து எடுத்துச் செல்லும் வாகனம் என 2 வாகனங்கள் இயங்கி வருகிறது. வாகனங்களில் அவசர சிகச்சை பிரிவிற்கு தேவைபடும் மருத்துவ உபகரணங்களான ALS (ADVANCE LIFE SUPPORT) செயற்கை சுவாச கருவிகள் வெண்டிலேட்டர், மானிட்டர், டீ பிரிவிலேட்டர், BLb(ஆக்ஸிஜன் வசதிகள்)ஆகிய வசதிகள் கொண்ட வாகனங்களும், பச்சிளம் குழந்தைகளுக்கான Neonatal சிறப்பு வாகனமும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு சிறப்பாக மருத்துவ தேவையினை பூர்த்தி செய்து வருகிறது.

பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.ஆர்.பாரிவேந்தர் அவர்கள் இந்த கொரோனா வைரஸ் பேரிடர் காலகட்டத்தில், பொதுமக்களின் சூழ்நிலைகளை உணர்ந்து, ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் 1 ஆம்புலன்ஸ் வாகனத்தினையும், தலா ரூ.80,000 மதிப்பிலான 3 ஆக்ஸிஜன் செறிவூட்டிகள் ரூ.2,40,000 மதிப்பீட்டிலும் வழங்கியுள்ளார். இந்த ஆம்புலன்ஸ் வாகனம் இரண்டு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள் பொருத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கப்பட்டுள்ள இந்த ஆமபுலன்ஸ் பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனையின் மருத்துவ சேவை பயன்பாட்டிற்காக மட்டுமே பயன்படுத்தப்படவுள்ளது. இதற்கு முன்பாக ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் 65 படுக்கை வசதிகள் செய்து தந்துள்ளார். தனது பாராளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்.

பொதுமக்களுக்கு தேவையான உயர்தரமான மருத்துவ சிகிச்சை வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தி வரும் மருத்துவ சேவைகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ப.ஸ்ரீவெங்கட பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு.ராஜா, கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மாவட்ட பொறுப்பு அலுவலர் மரு.அன்பரசன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**